# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2024
# குடியியற் கல்வி

**தரம் - 10** **நேரம் - 03 மணித்தியாலயம்**

**பகுதி - I**

**01 – 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

1. மக்களால் மக்களுக்காக நடாத்தப்படுகின்ற மக்களுடைய ஆட்சி முறை ஜனநாயக ஆட்சி முறையாகும் எனக் கூறியவர்.
01. சீலர் 02. காணகர் 03. லவல் 04. ஆபிரகாம் லிங்கன்

2. உற்பத்தி செய்யப்படும் பொருட்களை நுகர்வோரிடம் கொண்டு செல்லும் செயன்முறை.
01. விற்பனை 02. நுகர்வு 03. விநியோகம் 04. உற்பத்தி

3. ஒரு கட்சி முறை நிகழும் நாடுகளில் ஒன்று.
01. இந்தியா 02. இலங்கை 03. பிரித்தானியா 04. சீனா

4. இலங்கையில் மாகாண சபை முறையை உருவாக்கிய அரசியல் யாப்புச் சீர்திருத்தம்
01. 13வது 02. 15வது 03. 19வது 04. 20வது

5. பின்வரும் உற்பத்திப் பொருட்களில் இடைநிலைப் பொருளுக்கு உதாரணம்.
01. ஆடையணிகள் 02. வாகனங்கள் 03. உரம் 04. மருந்துகள்

6. சுவிட்சர்லாந்தின் நிறைவேற்றுத் துறையில் உள்ள உறுப்பினர்களை நியமனம் செய்வது.
01. தேசிய சபை 02. சமஷ்டிப் பேரவை 03. அரச சபை 04. மத்திய சபை

7. சனாதிபதி ஆட்சி முறையின் பண்புகளில் ஒன்று
01. நிர்வாகத்துறை சட்டத்துறைக்கு நேரடியாக பொறுப்புக் கூற வேண்டியதில்லை.
02. சட்டத்துறையால் நிறைவேற்றுத் துறையை பதவி விக்க முடியும்.
03. சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத் துறைக்கும் நேரடித்தொடர்புண்டு
04. சட்டத்துறை மூலம் நிறைவேற்றுத் துறை தெரிவு செய்யப்படும்.

8. தேர்தல் தொகுதிகளைப் பிரிக்கும் போது கவனத்தில் கொள்ளப்படும் நியதிகள்
01. நிலப்பரப்பு, மாவட்டம் 02. நிலப்பரப்பு, சனத்தொகை
03. மாகான எல்லை, மாவட்ட எல்லை 04. சனத்தொகை, வாக்காளர் தொகை

9. மனிதனின் நிலைப்புக்கு அத்தியாவசியமான அம்சங்கள்
01. விருப்பங்கள் 02. ஆசைகள் 03. தேவைகள் 04. உற்பத்திகள்

10. இலங்கையில் மாகாண சபையொன்றின் ஆளுநர் நியமனம் செய்யப்படுவது
01. முதலமைச்சரால் 02. பிரதமரால் 03. சபாநாயகரால் 04. ஜனாதிபதியால்

11. மோதல் ஒன்றை தீர்க்கும் போது “வெற்றி, வெற்றி தீர்வை” பெறுவதற்கும் பயன்படுத்தக்கூடிய இலகுவான முறை
01. வேண்டுகோள் விடுத்தல் 02. ஆலோசனை முன்வைத்தல்
03. கலந்துரையாடல் முறை 04. மத்தியஸ்தம் வகித்தல்

12. சுவிட்சர்லாந்தின் பிராந்திய அலகுகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றது
01. மாநிலம் 02. கென்ரன் 03. மாகாணம் 04. மாவட்டம்

13. அரசியல் உரிமைகளில் ஒன்று
01. கல்வி கற்றல் 02. விரும்பிய கட்சிக்கு வாக்களித்தல்
03. பேசும் உரிமை 04. வாழும் உரிமை

14. உற்பத்தி செய்யப்படும் பொருட்களுள் சேவைகள் உற்பத்திக்கு உதாரணமாக கூறக்கூடியது
    01. ஆடையணிகள்    02. ரப்பர்    03. வாகனங்கள்    04. கல்வி

15. சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாழ்க்கை முறைகளுக்கு ஏற்ப ஒழுகிச் செயற்படும் பழக்க வழக்கங்கள் முறைகள் அல்லது நற்பண்புகள்
    01. கலாச்சாரமாகும்    02. ஒழுக்கமாகும்    03. பண்பாடாகும்    04. அழகாகும்

16. சர்வஜன வாக்குரிமையைப் பெற தகுதியான வயதில்லை
    01. 18    02. 16    03. 19    04. 20

17. இங்கு தரப்பட்டுள்ள கல்மூனின் மோதல் முக்கோண மாதிரியில் A, B, C என்பவற்றை ஒழுங்கு முறையில் கூறும்போது அமையும் தொகுதி
    01. சூழ்நிலை, சூழல், தொடர்பு
    02. நடத்தை, மனப்பாங்கு, நம்பிக்கை
    03. நடத்தை, சூழ்நிலை, மனப்பாங்கு
    04. மனப்பாங்கு, சூழ்நிலை, வழமை

18. கிரேக்க நகர அரசின் பிரதான ஆட்சி நிறுவனம்
    01. ஆட்சி சபை    02. மக்கள் மன்றம்    03. செனட் சபை    04. அரச சபை

19. சனநாயக சமூகமொன்றில் பிரசைகளால் நிறைவேற்றப்பட வேண்டிய சட்ட ரீதியான கடமை
    01. மரபுகளை மதித்தல்    02. பொது சொத்துக்களைப் பாதுகாத்தல்
    03. வழக்காறுகளுக்கு ஏற்ப நடத்தல்    04. சமய நெருக்கேற்ப செயற்பாடல்

20. பொருட்களை உற்பத்தி செய்வதில் மனித வலுவை அதிகம் பயன்படுத்துவது
    01. உழைப்பு நுட்பம் எனப்படும்    02. முதலீட்டு நுட்பம் எனப்படும்
    03. தொழிநுட்ப நுட்பம் எனப்படும்    04. தொழில் நுட்பம் எனப்படும்

21. அரசின் விருப்பத்தை செயல் வடிவம் பெறச் செய்யும் முகவர்
    01. அரசு    02. அரசாங்கம்    03. மந்திரி    04. சபாநாயகர்

22. மாகாண சபை ஒன்றின் அமைச்சரவையானது முதலமைச்சர் உட்பட
    01. நான்கு பேரைக் கொண்டது    02. ஏழு பேரைக் கொண்டது
    03. ஐந்து பேரைக் கொண்டது    04. ஆறு பேரைக் கொண்டது

23. இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகமாகிய காலப்பகுதி
    01. 1994 – 2004    02. 1961 – 1970    03. 1948 – 1960    04. 1978 – 1993

24. மாகாண ஆளுநரின் பதவிக்காலம்
    01. 04 வருடங்களாகும்    02. 03 வருடங்களாகும்
    03. 05 வருடங்களாகும்    04. 06 வருடங்களாகும்

25. 1948 டிசம்பர் 10 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபை பொதுச் சபை மூலம் வெளியிடப்பட்ட பிரகடனம்
    01. மனித உரிமைகள் பிரகடனம்    02. மக்னா காட்டா பிரகடனம்
    03. யுத்தப் பிரகடனம்    04. அடிப்படை உரிமை தொடர்பான பிரகடனம்

26. நாட்டில் வாழும் பல்வேறு கலாச்சாரங்களுக்குரிய குழுவினர் ஒரு இனமாக கருதும் அரச கோட்பாடு
    01. சமஸ்டி அரசு    02. தேசிய அரசு    03. ஒற்றையாட்சி அரசு    04. பள்ளி ஆட்சி

27. பொருட்கள் சேவைகள் உற்பத்தியில் அரச துறையினருக்குரிய உற்பத்தி
    01. ஆடை உற்பத்தி    02. தொலைத்தொடர்பு சேவை
    03. வானொலி சேவை    04. கனிய எண்ணெய் உற்பத்தி

28. வளங்கள் தேவையிலும் பார்க்க குறைவாக காணப்படும் தன்மை
    01. வறுமை எனப்படும்    02. குறைவு எனப்படும்
    03. அருமை எனப்படும்    04. சுரண்டல் எனப்படும்

29. நல்லாட்சியின் அடிப்படை பண்புகளில் ஒன்றல்லாதது
   01. ஊடக சுதந்திரம்   02. உரிமைகள் பாதுகாக்கப்படல்
   03. சமூக நீதி நிலைநாட்டப்படல்   04. ஊழலுள்ள ஆட்சி நிர்வாகம்

30. ஆரம்ப காலத்தில் ஐக்கிய அமெரிக்காவில் எழுச்சியடைந்திருந்த குடியேற்றங்கள்
   01. 13   02. 15   03. 50   04. 25

31. சட்டசபையின் செயற்பாடுகளில் ஒன்று
   01. சட்டத்தை நடைமுறைப்படுத்தல்   02. சட்டத்தை உருவாக்குதல்
   03. சட்டத்தை பாதுகாத்தல்   04. சட்டத்தை விளக்குதல்

32. அரசின் கூறுகளில் ஒன்று அல்லாதது
   01. நிலம்   02. நீதித்துறை   03. இறைமை   04. அரசாங்கம்

33. அண்மையில் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி இலங்கையின் எத்தனையாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி
   01. 09வது   02. 08வது   03. 10வது   04. 05வது

34. முதலாளித்துவ பொருளாதார முறை நிலவுகின்ற நாடுகளில் ஒன்று
   01. ஜப்பான்   02. இந்தியா   03. கியூபா   04.இலங்கை

35. மோதல் ஏற்படுவதில் தாக்கம் செலுத்தும் உளவியல் காரணிகளில் ஒன்று
   01. திறன்கள்   02. சந்தர்ப்பம்   03. மனப்பாங்கு   04. நடத்தை

36. பன்மைப் பண்பாட்டுச் சமூகம் ஒன்றில் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதினால்
   01. ஊழல் மற்றும் மோசடிகள் குறைக்கப்பட முடியும்
   02. ஊடக சுதந்திரம் பாதுகாக்க முடியும்
   03. அரசியல் தலைமைத்துவத்திற்கு மதிப்பளித்தல் இடம்பெறும்
   04. அன்னியொன்ய தொடர்பு விருத்தியடையும்

37. இலங்கையில் அதிகளவு மாவட்டங்களைக் கொண்ட மாகாணம்
   01. வடமாகாணம்   02. மேல் மாகாணம்   03. தென் மாகாணம்   04. கிழக்கு மாகாணம்

38. ஒரு மத்திய அரசின் கீழ் அதிகாரங்கள் ஒன்று குவிக்கப்பட்ட அரசு
   01. கூட்டாட்சி   02. ஒற்றை ஆட்சி   03. தேசிய அரசு   04. மத்திய அரசு

39. பின்வரும் நாடுகளில் பன்மை பண்பாட்டுச் சமூகத்திற்கு உதாரணமாகக் கூடிய நாடு
   01. தாய்லாந்து   02. அரேபியா   03. இலங்கை   04. மலேசியா

40. ‘‘அ’’ நிரலை ‘‘ஆ’’ நிரலுடன் இணைக்கும் போது சரியாக அமையும் விடைத் தொகுதி

| **அ** | **ஆ** |
|---|---|
| நிலம் | A - வட்டி |
| உழைப்பு | B - இலாபம் |
| மூலதனம் | C - ஊதியம் (கூலி) |
| முயற்சி | D – வாடகை |

   01. BCDA   02. DCAB   03. DCBA   04. ABDC

# குடியியற் கல்வி

## பகுதி - II

- முதலாம் வினா கட்டாயமானது
- முதலாம் வினாவும் வேறு நான்கு வினாக்களும் உட்பட மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக

**1.** I. ஜனநாயக ஆட்சி முறையில் இரு பிரதான பிரிவுகளும் யாவை?

II. எதென்ஸ் நகராட்சியில் வாக்குரிமை மறுக்கப்பட்ட பிரிவினரில் இருவரினை குறிப்பிடுக.

III சமஷ்டி அரசாங்க முறையின் இருவகையான அதிகார மகிங்களையும் குறிப்பிடுக

IV இலங்கையில் பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் அமைவிடம் தொடர்பான காரணிகளில் இரண்டினை குறிப்பிடுக.

V உற்பத்தி தொடர்பாகப் பயன்படுத்தக்கூடிய இரு நுட்பங்களையும் குறிப்பிடுக

VI நவீன உலகில் உற்பத்தி நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஒழுங்கமைப்புக்கள் இரண்டு தருக.

VII சார்க் அங்கத்துவ நாடுகளின் இடையே செய்து கொள்ளப்பட்டுள்ள இரண்டு வர்த்தக உடன்படிக்கைகளும் எவை.

VIII சனநாயகம் பற்றிய வரைவிலக்கணங்களை முன்வைத்த பிரபல நபர்கள் இருவரைப் பேரிடுக.

IX சுவிட்சர்லாந்தின் மத்திய அரசின் அதிகாரங்களில் இரண்டினைக் குறிப்பிடுக.

X மோதல் ஏற்படும் இரு பிரிவினரை குறிப்பிடுக.

(2 x 10 = 20 புள்ளிகள்)

**2.** I தேவைகள் என்றால் என்ன?

II உற்பத்தியுடன் தொடர்புடைய பொருட்கள் சேவைகளின் முத்துறைகளையும் குறிப்பிடுக?

III பொருளாதாரத்தில் எதிர்நோக்கும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள் மூன்றினையும் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

**3.** I மாகாண சபைக் கட்டமைப்பின் கூறுகளில்/ நிறுவனங்களில் முதல் இரண்டினை குறிப்பிடுக?

II மாகாண முதலமைச்சரின் அதிகாரங்கள், பணிகளில் மூன்றினைக் குறிப்பிடுக?

III மாகாண சபை ஒன்றின் அதிகாரங்களும் பணிகளும் மூன்று நிரல்களின் பிரகாரம் வகுக்கப்பட்டுள்ளன. அவை எவை எனக் குறிப்பிட்டு அவற்றுள் ஒரு நிரலை விளக்குக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

**4.** I இலங்கை வாக்காளர் சர்வஜன வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்குள்ள தேர்தல்களின் பெயர்கள் இரண்டினை குறிப்பிடுக?

II அரசியல் கட்சியின் அனுகூலங்கள் 3 தருக.

III அரசாங்கத்தின் முத்துறைகளையும் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

**5.** I உற்பத்தி என்றால் என்ன?

II பொருளாதாரமொன்றல் இடம் பிரதான செயற்பாடுகள் மூன்றினையும் குறிப்பிடுக.

III பொருளாதாரத்தில் இடம்பெறும் உற்பத்தியின் மூன்று துறைகளையும் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றினை விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

**6.** I சர்வதேச மோதல்களின் இரு வகைகளையும் குறிப்பிடுக.

II மோதல் தீர்வின்போது பிரஜை ஒருவர் கொண்டிருக்க வேண்டிய தனியாள் பண்புகள் மூன்றினை எழுதுக.

III மோதலை தீர்க்கும் முறைகளில் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

**7.** I சமூகமொன்றில் பிரஜை ஒருவரினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் இரண்டினையும் குறிப்பிடுக.

II அரசின் பிரஜை மீதான பொறுப்புகள் 3 தருக.

III தற்கால அரசுகளில் செயற்படுத்தப்படும் அரசாங்க முறைகள் இரண்டினையும் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றின் பண்புகள் மூன்றினை குறிப்பிடுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)